Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

C.C.No. 213/2023

Deposition of witness for Prosecution P.W. 1 Date : 18.10.2024

| | | | |
|---|---|---|---|
| Name : | முகமது யூசுப் | Village : | அவினாசி |
| Father's Name : | வாஹாப் | Taluk : | அவினாசி |
| Age : | 70 | Religion : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2024 **(Accused Present)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.

நான் தற்போது திருமுருகன்பூண்டியில் குடியிருந்து ஒரு தனியார் நிறுவனத்தில் PRO -ஆக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 4 நபர்களில் இருவர் இன்று ஆஜராகியுள்ளனர். இருவர் ஆஜராகவில்லை. கடந்த 08.12.2018-ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு எனது பைனான்ஸ் கம்பெனியில் உரிமையாளர் எஸ்.பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான கீரணந்தத்தில் உள்ள காலியிடத்திற்கு சென்று காலியிடத்திற்கு சுத்தம் செய்ய வேண்டி சென்றேன். என்னுடன் நண்பர் அன்பு (எ) அன்பரசு வந்திருந்தார். எதிரிகள் ராமலிங்கம் மற்றும் ஆஜர் எதிரிகள் 4 பேரும் வந்து தகாத வார்த்தைகளால் தாயோழி என்று பேசினார்கள். வெட்டிக் கொன்றே போடுவேன் என்று சொன்னார்கள். அந்த சமயத்தில் தள்ளுமுள்ளு எற்பட்டு நான் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. கையில் அறுவாள் வைத்து என்னை வெட்ட வந்தார்கள். நான் இடத்தைவிட்டு வெளியே வந்துவிட்டேன். எனது ஓனரிடம் எதிரிகள் பணம் கேட்டது தொடர்பாக எனது ஓனருக்கும் அவர்களுக்கும் பிரச்சனை இருந்தது. அதன்பிறகு நான் 13.12.2018-ம் தேதி இந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நான் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதால் புகார் கொடுக்க தாமதம் ஆகிவிட்டது. இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1-**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் PRO -ஆக பணியாற்றுவது தொடர்பாக ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது ஓனருக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி ராமலிங்கம் பணம் கேட்டதாகதான் சொன்னேன். நான் அலுவலராக இருந்து இடத்தை சுத்தம் செய்ய வந்தேனா என்றால் என்னுடன் அன்பரசு என்ற அன்பு வந்தார். என்னுடைய புகாரில் மதியம் 01.00 மணிக்குதான் சம்பவயிடம் சென்றதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் அத்துமீறி உள்ளே நுழைந்து தீ வைத்ததாக நான் சொல்லியுள்ளபோது அது தொடர்பான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அங்கு சாம்பல் மற்றும் துணிதான் இருந்தது. அந்த சாம்பல் மற்றும் துணியினை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் சரிதான். சோளம் விளைவித்திருந்ததை எரித்துவிட்டதாக நான் கொடுத்த புகாரில் உள்ளதா என்றால் இல்லை. இந்த புகாருக்கு மறுநாள்தான் தீ வைத்தார்கள். அந்த சம்பவத்திற்கு வேறு புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த சம்பவம் குறித்து புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்தவொரு

சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு. சம்பவயிடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே 2-3 கிலோ மீட்டர் இருக்கலாமா என்றால் முன்பின் இருக்கலாம். சரியாக தெரியாது. என்னுடைய புகாரில் சம்பவத்தினை தொடர்ந்து அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். பொதுவாக ஒரு அடிதடி பிரச்சனை ஏற்பட்டு அதன்பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் மருத்துவமனையில் இருந்து அது தொடர்பாக தகவல் காவல் நிலையத்திற்கு கொடுக்கப்படும் என்றால் சரிதான். ஆனால் நான் திருப்பூருக்கு சென்று என் ஓனருக்கு தகவல் தெரிவித்து விட்டு மருத்துவமனையில் அனுமதியானேன். இந்த விவரத்தை பற்றி முதல் தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம் மற்றும் முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னர் 2-ம் எதிரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதில் எனது ஓனரையும், கோவில்பாளையம் காவல் ஆய்வாளரையும் தரப்பினர்களாக சேர்த்து பிரச்சனை உரிமையியல் தொடர்பானது என்பதால் காவல் துறையினர் இதில் தலையிடக்கூடாது என்று மனுதாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது ஓனர் பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். நான் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் அது தவறு. உரிமையியல் தொடர்பான பிரச்சனையை சட்டத்திற்கு புறம்பாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதை தற்போது குற்றவியல் வழக்காக மாற்றப்பட்டுள்ளது என்றால் தவறு. நான் கொடுத்த புகார் பொய் என்றும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.